சிறப்பிதழ்
**Special Issue**

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

01 மார்கழி 2052
16th December 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

(A Quarterly International Multilateral Thamizh Journal)

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

பன்னாட்டு கருத்தரங்கம் -2021
சிறப்பிதழ் : தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்

சிறப்பிதழ் ஆசிரியர்

**Special Issues Editor**
முனைவர் பா. அருள்ஜோதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

35

# ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பண்பாட்டுக் கட்டமைப்பு

**ர.பாலதரணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

நெறியாளர் **முனைவர் க.தனலட்சுமி**
தமிழ் உதவிப்பேராசியர், நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆய்வுச்சுருக்கம்

பண்பாடு மனிதனின் நாகரிக வளர்ச்சியால் ஏற்பட்டது. மனிதன் விலங்குகளில் இருந்து தோன்றியவன். அதனால் அவனுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் என எல்லாவற்றையும் தன் வாழ்க்கையில் அமைத்துக் கொண்டான். அவை பண்பாடாக வளர்ச்சி அடைந்தது. அதில் வீரம், காதல்,ஈகை, இசை, கற்பு, கல்வி, நட்பு ஆகிய நிலைகளும் அடங்கும். பண்பாட்டைத் தனியே எடுத்துப் பார்க்க முடியாது. மேற்கூறிய அனைத்திலும் பண்பாடு அடங்கி அதன் பின் வளர்ச்சி அடைந்தனது எனலாம். ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் பண்பாட்டுக் கட்டமைப்பை வெளிப்படுத்துகின்றன.

## முன்னுரை

பண்பாட்டு கட்டமைப்பு என்பதில் வீரத்தைப் பற்றி எடுத்துரைத்துள்ளார். அதில் வீரத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் இருந்துள்ளார்கள் என்பது பற்றியும், ஆண், பெண் காதலும் காதலால் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல் பற்றியும் கூறியுள்ளார். பெண்கள் கல்வி கற்பதின் அவசியத்தையும் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் கூறியுள்ளதைக் அறியலாம். மனதை மயக்கும் இசைக் கருவிகளை ஆண்கள் மட்டுமே கற்றுக் கொண்ட பொழுது அதை ஆர்வமுடைய பெண்களும் கற்று அதில் ஏற்பட்ட சிக்கலையும் பற்றியும் கூறியுள்ளார். பெண்களின் கற்பின் முக்கியத்துவத்தைப் பற்றியும், நட்பில் ஏற்பட்ட சிக்கல் பற்றியும்,ஈகை குணத்தைப் பற்றியும் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் கூறியுள்ளதை இக்கட்டுரையின் வழி காணலாம்.

## பண்பாட்டு விளக்கம்

“பண்பாடு எனும் இந்தச் சொல் தான். பண்பு, பண்(ணு), பண் பண்பாடு, பண்டு இந்தச் சொற்களையெல்லாம் சேர்த்து நினைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.”[1]என்று தி.சு.நடராஜன் அவர்கள் கூறிப்பிடுகின்றார்.

“பண்பாடு என்பது மனித சமதாயத்தில் ஒவ்வொருவனும் ஓர் உறுப்பினன் என்ற நிலைமையில் அறிவு, நம்பிக்கை, அறவாழ்க்கை, சட்டம், வழக்கங்கள் முதலியன பற்றிப் பெற்ற ஒருவித வாழ்க்கை முறையாகும்.”[2]என்கிறார் டெய்லர் அவர்கள்.

இப்படியாக, பல பரிமாணங்களில் பண்பாடு அமைகின்றன. அவற்றுள் வீரம், காதல், கல்வி, இசை, கற்புடைமை, நட்பு, ஈகை ஆகியன இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றன. இவற்றைப் பற்றி ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் தன் கதையில் சுட்டியுள்ளதை அறியமுடிகின்றது.

## வீரம்

வீரம் என்பது துணிவு ஆகும். வீரம் என்றால் ஒருவரைத் தம் துணிவால் அடித்து

காயப்படுத்துவது வீரம் ஆகாது. வீரம் உடல் வலிமையைக் காட்டுகின்றனது. உடலின் வலிமையால் ஒருவனை வெல்வதும் வீரம்தான். போர் நிலையை எடுத்துக் கொண்டால் அடிப்படையானதே வீரம் தான். அப்படிப்பட்ட இராணுவம் இன்றும் சிறந்து விளங்குகின்றது.

"ஜென்ம பூமி" என்ற கதையில் சரஸ்வதியும், அவள் தாயும் தனியே வீட்டில் வசித்து வருகின்றார்கள். சரஸ்வதியின் தாய் கணவன் இறந்ததால் மனவருத்தத்தில் இருக்கின்றாள். அவர் இராணுவத்தில் பணியாற்றியவர். தன் கணவன் இராணுவத்தில் இருந்த போது சரஸ்வதியின் தாய் தனிமையிலே இருந்தார். அப்போது தாய் அனுபவித்த வலிகள் தன் மகளுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றாள். கணவன் இராணுவத்தில் இருக்கும் பொழுது, மனைவி தனியாகவே வாழ்ந்து, குழந்தை பெற்ற நிலையையும், தனிமையிலே இருந்ததை எல்லாம் நினைத்து, தாய் தன் மகளை வேறு ஊருக்கு இராணுவத்தில் இல்லாத மாப்பிள்ளையாகப் பார்த்து திருமணம் செய்து வைக்க நினைக்கின்றாள். ஆனால் சரஸ்வதி திருமணத்தை ஏற்காமல் தனது தந்தையைப் போலவே இராணுவத்தில் பணி செய்ய நினைக்கின்றாள். தாய் திருமணம் செய்து கொள்ளும்படி எத்தனை முறை கூறியும் சரஸ்வதி அதை மறுக்கின்றாள். தனது தந்தையின் இராணுவ உடையினை எடுத்துப் அணிந்து கொண்டு இராணுவப் பணியில் ஈடுபடுவதற்காகத் தயராகிறாள்.

**"அப்பாவின் சீருடையை மார்போடு அணைத்து முத்தமிட்டபோது ஜென்ம சாபல்யம் அடைந்த சுகம். வீணைக்கு ஓய்வு தந்து துப்பாக்கியும் சுமக்கட்டுமே சரஸ்வதி."** என்பதின் மூலம்இராணுவத்தில் பணி செய்ய நினைக்கும் பெண்ணின் வீரத்தினைக் காணமுடிகின்றது. இதனை பாரதியார்,

**"இலகு சீருடை நாற்றிசை நாடுகள்<br>யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே<br>திலக வாணுத லார்நங்கள் பாரத<br>தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்<br>விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை<br>வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்."**[3]

என்றுகூறுவது குறிப்பிடத்தக்கது.

காதல்

காதல் என்பது ஆண், பெண் என்று இருவருக்குமே பொதுவானது. ஏதோ ஒரு சூழ்நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் ஆணும், பெண்ணும் காதலிக்கின்றார்கள். அப்போது அவர்கள் மனதில் காதலானது பூக்கின்றது. காதல் பூத்து நாளடைவில் அது பிரிக்க முடியாத அன்பாக மாறுகின்றது.

**"காதல் என்பது கருத்துக்கினிய பொருள், காதுக்கினிய சொல், காதல்லால் எல்லாம் உண்டுளூ காதல் இல்லையேல் ஒன்றுமில்லை."**[4] என்று காதல் பற்றிய கருத்தினை இரா.பி.சேதுப்பிள்ளை விளக்குகின்றார்.

**"தாய்பால் கூலி"** என்ற கதையில் ராஜம் என்னும் பெண், ருக்மணியம்மாள் வீட்டில் வேலை செய்கின்றாள். ராஜம் மகள் ராதா என்பவள் காதலிக்கின்றாள். காதலால் படிப்பில் விருப்பம் இல்லாமல் இருக்கின்றாள். இதை அறிந்த தாய் வருத்தம் அடைந்தாள். நான் என் தாயிற்குச் செய்ததைப் போலவே எனக்கு என்னுடைய மகள் என்று ராஜம் நினைக்கின்றாள். ராதாவின் நடவடிக்கையில் மாற்றத்தை கண்ட தாய் வருத்தம் அடைந்தாள். அப்போது ராஜம் அவர் வீட்டில் ராதாவிடம் ஒரு உண்மையைச் சொன்னாள் நானும் தாய், தந்தை பேச்சைக் கேட்காமல் காதலனுடன் ஊரை விட்டு ஓடி வந்துவிட்டேன். அவன் ஊருக்கு ஒரு பெண்ணை மயக்கியவன் என்று புரிவதற்குள் கையில் நீ இருந்தாய் படிப்பும் முடியவில்லை. உறவுகளையும் பார்க்க முடியாது. அதனால் தான்

விதவையாக வெள்ளை நிறப் புடவையை அணிந்தேன். இதை அனைத்தும் ராதாவிடம் சொன்னாள். ஆனால் பயனில்லாமல் போனது. காதலனுடன் ராதா சுற்றுலாச்செல்வதாகச் சொல்லி இரவு இரயிலுக்குத் தயாரானாள். அதைக் கண்ட தாய், இந்த வயதில் படிப்பு, வேலை என்று தேடிக்கொள். படித்து முடித்து, வேலை பார்த்து அதன்பின்பு எங்குவேண்டுமானாலும் செல் என்றாள். ராதா வெளியே சென்றாள் என்பதை அறிந்த தாய் வருத்தம் அடைந்தாள். கண்களில் நீர் வந்து நெஞ்சு அடைத்து கொண்டது. அப்போது தோளை ஒரு கையானது தொட்டதைப் போல் இருந்தது. ராஜம் எழுந்தாள். சுற்றுலா செல்லவில்லையா என்று கேட்ட தாயிடம் நான்கு வருடம் கழித்து போகலாம் என்றாள். இதைக் கேட்ட தாய் மகிழ்ச்சி அடைந்தாள்.

"மெதுவாய்த் தோளைத் தொட்டது ஒரு கை திடுக்கிட்டுக் குப்பென்று எழுந்தாள். யார்? யார்? மசமசப்பாய் உருவம். கண்ணச் சிமிட்டினாள். ரா...ராதா? ராதாவா? ம்... நாந்தாம்மா... நீ...நீ? எக்ஸ்கர்ஷன்? ம்ஹீம் நாலு வருஷம் கழிச்சு போகலாம் சொல்லிட்டு வந்தேன்... யப்பா... தெய்வமே...''என்ற கதையின் மூலம் காதலால் பெண்களுக்கு ஏற்படும் சிக்கலினை ஆண்டாள் பிரியதர்ஷினி எடுத்துக்காட்டியுள்ளார்.

**கல்வி**

கல்வி என்பது குழந்தை பருவத்தில் இருந்து மனிதன் வாழும் காலம் வரை தொடர்ந்து வருவதாகும். கல்வியால் மனிதன் சிறந்த அறிவையும், நல்ல ஒழுக்கத்தினையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒருவன் கல்வி கற்பதினால் அவனுள் உள்ள திறமைகளை வெளிக்கொணர முடியும். அதுவும் பெண்களுக்கு, கல்வி முக்கியமான ஒன்றாகும்.

"கல்வி ஒருவனுக்குப் பிழைப்பை மட்டும் தராமல் உழைப்பையும், பிழைப்பையும் தருதல் வேண்டு மென்பர்."[5] என்று கல்வியின் சிறப்பை சுபாசு சந்திர போசு விளக்கியுள்ளார்.

> "பெற்றநல் தந்தை தாய்மாரே- நும்
> பெண்களைக் கற்கவைப்பீரே!"[6]

என்று பெண்கள் கல்வி கற்பதின் அவசியத்தை கூறுகின்றார்.

"ஆங்கோர் ஏழைக்கு" என்ற கதையில் சரஸ்வதி என்னும் பெண் வீட்டிலே கடைசி தேர்வினை நல்ல படியாக எழுத வேண்டும் என்று பரபரப்புடன் இருக்கின்றாள். எட்டாம் வகுப்பு படிக்கும் தம்பியான சுப்பிரமணிக்கும் அன்று தான் கடைசி தேர்வு. அவனும் படித்துக் கொண்டிருந்தான். சரஸ்வதி படிப்பது இரண்டாம் தாய்க்குப் பிடிக்கவில்லை. சரஸ்வதி படிக்க ஆசைப்படுகின்றாள். படித்து ஆசிரியராக வேண்டும் என்று நினைக்கின்றாள். சரஸ்வதியின் பள்ளி படிப்பைத் தடுக்க அவளின் இரண்டாவது தாய், வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் செய்யச் சொல்லுவாள். இரண்டாவது தாயின் மகளான, புத்தி சுவாதினம் இல்லாத சங்கரியைப் பார்க்கச் சொல்வாள். இப்படியாக இருக்கும் நிலையிலும், சரஸ்வதி, தான் எழுதிய தேர்வில் ஐநூறு மதிப்பெண்ணிற்கு நானூறு பெற்று முதல் மதிப்பெண் பெற்றாள். இந்த மதிப்பெண் அடிப்படையில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர வேண்டும் என்று நினைக்கின்றாள். அதற்காக விண்ணப்பப் படிவத்தை தனது ஆசிரியரிடம் வாங்கித் தரும்படி கேட்டு அதைப் பூர்த்தி செய்கின்றாள். அதற்குள் தாய், சரஸ்வதிக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்தாள். அது பெரிய பணக்காரர் வீட்டு மகன். அந்த மாப்பிள்ளை எப்போதுமே தானாகவே பிதற்றிக் கொண்டு, ஓர் இடத்தில் நிலையாக இல்லாமல் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டு இருப்பவன். அவனைப் பணத்திற்காகத் திருமணம் செய்து வைக்க, இரண்டாம் தாயான மருதாயி நினைத்தாள். ஆனால் சரஸ்வதியோ படிப்பின் மீது கொண்ட ஆர்வத்தால்,

காவல் நிலையம் சென்று அங்கே இருக்கும் காவலரிடம் தான் வாங்கிய மதிப்பெண் பட்டியலையும், ஆசிரியப் பயிற்சிக்கான உத்தரவையும், படிக்க நினைப்பதையும், வீட்டார் திருமண ஏற்பாடு செய்ததையும், அத் திருமணத்தை தடுத்து நிறுத்தி, தன் படிப்பிற்கு வழி செய்யும்படி காவலரிடம் கூறினாள். அதைக் கேட்ட காவலர் நான் உனக்கு உதவுகின்றேன் என்று சரஸ்வதியிடம் கூறினார்.

**"பூட்ஸ் கால் டக்டக்கென்று சப்திக்க நடந்த போலீஸ்காரர் பின்னால் நம்பிக்கையோடு நடந்தாள் சரஸ்வதி.''** என்பதின் மூலம் பெண்கள் படிக்க ஆசைப் படுவதை எடுத்துக்காட்டியுள்ளார்.

**இசை**

இசை எல்லோருக்கும் பிடித்த ஒன்று. இசை மனதிற்கு இனிமை தரும். இசையானது காதிற்குக் கேட்கும் ஒலி அதிலிருந்தும் ஓர் இனிமை தோன்றுகின்றது. மனிதன் பிறக்கும் பொழுதும், இறக்கும் பொழுதும் இசை அவனுடனே இருக்கின்றது. கோபத்தில் இருக்கும் பொழுதும் அந்த இடத்தில் இசை முக்கியத்துவம் பெறுகின்றது. இசைக் கருவிகள் பார்ப்பதற்குச் சாதாரணமாகத் தெரிந்தாலும் அதிலிருந்து வரும் இசை மிகப்பெரியதாகவே உள்ளது.

**"இனிய ஒலிகள் செவிவழிப்புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும். பொருந்தவும் வைக்கின்ற பொழுது அவை இசை என்ற பெயரைப் பெறுகின்றன.''**[7] என கூறுவதைக் அறியமுடிகின்றது.

**"சிலம்பின் மிச்சம்''** என்ற கதையில் தங்கத்தாய் என்னும் பாட்டியும், பூரணியும் ஒரு வருடத்திற்கு வாசித்த நாயனத்தை எடுத்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். போன திருவிழா வரைக்கும் நாயனத்தை நான் தான் வாசித்தேன். இன்று விதவையாக இருக்கின்றேன். பேத்தி பூரணியும் விதவையாக உடன் சேர்ந்து விட்டாள். நாயனவாசிப்பிற்காக, தங்கத்தாயிற்கு நாயன மகாராணி பட்டம் கிடைத்தது. அவள் மாமா, தான் தங்கத்தாய் நாயனம் பழக உறுதுணையாக இருந்திருக்கின்றார். அதன் பின் அவரே தங்கத்தாயை, திருமணம் செய்து விட்டார். தங்கத்தாய் நாயனம் வாசிப்பதைப் பற்றி ஊரே பேசியது. ஆண்கள் மட்டுமே வாசிப்பதை, பெண் வாசிப்பதா என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால் தங்கத்தாயோ அதைக் கண்டு கொள்ளாமல் நாயனத்தை வாசித்தாள். கச்சேரி, பட்டம், பரிசு என ஆனந்தமாக இருந்தாள். தங்கத்தாயிற்கு ஐந்து மகள்கள் அவற்றுள் மூணு மகள்களை, திருமணம் செய்து கொடுத்துவிட்டாள். கடைசியாக இரண்டு பெண்களை, திருமணம் செய்து கொடுப்பதற்குத் தங்கப்பதக்கம், வீடு, வில் வண்டி என அனைத்தையும் விற்று தனி ஆளாகவே திருமணம் செய்து வைத்தாள். ஒரு நாள் நடேசனும், பூரணி கணவனும் வானொலி பதிவிற்காகப் பேருந்தில் இறங்கி சாலையைக் கடக்க நிற்கும் பொழுது, நடேசனை பூரணி கணவன் கையைப் பிடித்து வேகமாக வரும் வண்டிகளின் நடுவே இழுத்துச் சென்றான். அதனால் நான்கு சக்கர வண்டியில் அடிபட்டு இறந்து விட்டார்கள். இதனால் தங்கத்தாயும், பூரணியும் ஒரே நேரத்தில் விதவையானார்கள். இதனால் உணவிற்குச் சிக்கலானது. அப்போது கோயிலில் ஆண்கள் நாயனம் வாசித்தார்கள். அங்கு தங்கத்தாயும் முன்பைப்போல் நாயனம் வாசிக்க ஒரு வாய்ப்புக் கேட்டுச் சென்றாள். கோயில் தர்மகர்த்தாவோ விதவை வாசிக்க கூடாது என்றார் அதைக் கேட்ட தங்கத்தாய் நெற்றி நிறைய அம்மன் குங்குமத்தை வைத்துவிட்டு பூரணிக்கும் குங்குமத்தை வைத்து நாயனத்தை வாசித்தாள்.

**"ஆனந்த பைரவி கேட்டுத் தெப்பக் குளத்து அலைகள் நடனமாட, காற்று அம்மைக்குத் தூது போக, பூரண சுமங்கலியான அம்மையின் முகத்தில் ஆயிரம் கோடிச் சூர்யப் பிரகாசச்சிலிர்ப்பு...''**என்று

இசைக்கருவிகள் பற்றியும் இசையை நேசிக்கும் பெண் பற்றியும் ஆண்டாள் பிரியதர்ஷினி எடுத்துக்காட்டியுள்ளார்.

## கற்பு

கற்பு பெண்களுக்கு உரியது. ஒரு சில ஆண்களிடம் இருந்து கற்பை காப்பாற்ற வேண்டியுள்ளது. முற்காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு அதிகமாக வெளியிலே வரமாட்டார்கள். ஆனால் இப்போதைய காலத்தில் கல்வி, வேலை என எல்லா இடங்களுக்கும் வீட்டை விட்டு வெளியே வருகின்றார்கள். அப்படி வெளியே வருபவர்களுக்கு, கற்பு என்பதும் அதைக் காப்பாற்றிக் கொள்வதும் முக்கியமானதாகும்.

> **"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃதை பொதுவில் வைப்போம்."**[8]

எனக் கற்பைப் பற்றிப் பாரதியார் கூறுகின்றார்.

**"தீ இனிது"** என்ற கதையில் நெருப்பு ஆணாக இருக்கின்றது. நெருப்பு எல்லாவற்றையும் ருசி பார்த்திருக்கின்றது. பூ, பழம், துணி, நவரத்தினம், ஓலைகள், விலங்குகள், தானியம், வீடு, குடிசை, குழந்தைகள்,ஆண், பெண் எல்லாவற்றையும் பார்த்து விட்டது. இது எல்லாமே ஒவ்வொரு விதமாக உள்ளது. சிறியதாக தீக்குச்சியில் தொடங்கி, எரிமலை வரை நெருப்பானது பார்த்துள்ளது. கோயில் சாமிக்கு, கற்பூரம் காட்டும் பொழுதும் சாமிக்கு நிகராக மக்கள் என்னையும் பார்க்கின்றார்கள். ஆனால் அவள் மட்டும் என்னை கவனமாகப் பார்த்துக் கொள்கிறாள். கணவன் மனைவியைக் கொடுமை செய்யும் பொழுது அவள் என்னிடம் சரணடைகின்றாள். அதை நான் ஏற்கின்றேன். கணவனை விடவும் அதிக நேரம் அவளின் அருகிலே இருக்கின்றேன். காலை உணவில் இருந்து இரவு உணவு வரை அவள் என்னிடமே இருக்கின்றாள். ஆனாலும் அவள் என்னைப் பக்குவமாகச் சமாளிக்கின்றாள். அவளது கையைத் தொட்டுப் பார்க்க நான் நினைத்தாலும் அது முடியாமல் போகின்றது. அவள் என்னை அடிமையாக்கி தொடாதபடி வேலை வாங்கிவிடும் முதலாளி. கண்ணகி, மதுரையை எரிக்க கட்டளை இடும் பொழுதும், சீதையை,இராமன் நெருப்பில் இறங்கச் சொல்லும் போதும் நான் சற்றும் சிந்தனை செய்யாமல் எரித்து இருக்கின்றேன். அவளை நெருங்க நினைத்தாலும் என்னால் முடியவில்லை. அதற்கு அவளும் இடம் தருவதில்லை. **"ஆனாலும் என்ன? நடக்கும் என்று நானும், நடக்கவே நடக்காது என்றும் அவளும் நம்பியபடி நகர்கிறது வாழ்க்கை பார்க்கலாம் யார் ஜெயிக்கிறார்கள் என்று..."** என்று ஆண்டாள் பிரியதர்ரீனி இதனை விளக்குகின்றார்.

## நட்பு

ஒருவரைப் பார்த்து அவருடன் பழகும் பொழுது அது நட்பாக மாறுகின்றது. நட்பு இல்லாமல் இந்த உலகம் இயங்காது என்று கூறலாம். சிறியவர் முதல் பெரியவர் வரை நட்பில் அகப்பட்டு கொண்டுள்ளார்கள். அந்த நட்பு காலத்திற்கும் நிலைத்து நிற்கின்றது. நல்ல நட்பும் உண்டு. தீய நட்பும் உண்டு என்பதை நாம் தேர்ந்து எடுக்கும் முறையில் காணலாம்.

> **"நண்பர்களை நேசிப்போம்**
> **நட்பைச் சுவாசிப்போம்."**[9]

என்று கூறுவதைக் காணமுடிகின்றது.

**"வேர்கள் மண்ணோடு தான்"** என்ற கதையில் நித்யா என்னும் பெண்ணும் சுரேஷ் என்பவரும் ஒரே அலுவலகத்தில் பணி செய்கின்றார்கள். அவர்கள் இருவரும் நண்பர்கள். படித்த புத்தகத்தில் உள்ள கருத்தினைப் பேசுவார்கள். அவர்கள் ஒன்றாகப் பார்த்த படம், அரசியல் என எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வார்கள். இப்படியாக அவர்கள் இருவரும் பேசிக் கொள்வது அலுவலகத்தில் வேலை பார்க்கும் மறறவர்களின் பார்வையில் காதலர்களாகவே பார்க்கப்பட்டார்கள். எப்போது

திருமணம் செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டவர்களிடம் நாங்கள் நண்பர்கள் என்று கூறியதைக் கேட்ட மற்ற நண்பர்கள் கேலி செய்தார்கள். அப்போது கொடைக்கானல் சுற்றிப்பார்க்கச் சென்றார்கள். அங்கு ஒரு அறையில் நீங்கள் இருவரும் நல்ல நண்பர்கள் என்றால் இன்று இரவு மட்டும் ஒரே அறையில் தங்குங்கள் என்று மற்ற நண்பர்கள் கூற அதைக் கேட்ட நித்யாவும் சுரேஷும் அவர்கள் சொன்னபடி ஒரே அறையில் தங்கினார்கள். அப்போது அங்கு ஏற்பட்ட விபத்தினால் நித்யா கற்பினை இழந்து விட்டாள். அவர்கள் அங்கே இருந்து வீட்டிற்குச் சென்று விட்டார்கள். நண்பர்கள் கூறியதனால் ஒரே அறையில் தங்கியதால் இப்படி நடந்து விட்டதே. நண்பர்களாக இருந்த பொழுதும் இது எப்படி நடந்தது என்று நித்யா மன வருத்தத்தில் இருந்தாள். அவள் கருவுற்றிருந்தாள். சுரேஷ் அன்று நடந்ததற்கு வருத்தப்பட்டான். சுரேஷ், நித்யாவிடம் நாம் திருமணம் செய்து கொண்டு கருவை நல்லபடியாக வளர்க்கலாம் என்றதை எப்படி தாயிடம் சொல்வது என்று குழப்பத்தில் இருந்த நித்யாவிடம், இனிமேல் நீ வயிற்றில் வளரும் குழந்தைக்கும் சேர்த்து நன்றாக சாப்பிட வேண்டும் என்ற தாயை ஆச்சரியத்துடன் பார்த்தாள் நித்யா. இது நீ சொல்லாமலேயே எனக்குப் புரிந்து விட்டது. சுரேசிடம் உன்னை இழந்து விட்டு இன்னொருவரை திருமணம் செய்ய உன்னால் முடியாது. ஏன் என்றால் அடிப்படையில் நீ இந்தியப் பெண் என்பதைக் கேட்ட நித்யாவின் மனசும் தெளிவாகிவிட்டது.

‘‘அவள் மனசும் தெளிவாகி விட்டிருந்த வானம் போலிருந்தது.” என ஆண்டாள் பிரியதர்ஷினி கூறுகின்றார்.

**ஈகை**

ஈகை என்றால் தன்னிடம் இருக்கும் ஒரு பொருளை மற்றவர்களின் நிலை அறிந்து கொடுப்பது ஆகும். எல்லாரும் பணம், ஆடை, உணவிற்குப் பஞ்சமில்லாத வாழ்க்கையில் இருப்பார்கள் என்று சொல்லி விட முடியாது அதே நேரத்தில் எல்லாருமே வசதியை உடையவர்கள் என்றும் கூறிவிட முடியாது. அப்படியும் இப்படியுமாக மாறி இருப்பதே இந்த வாழ்க்கை.

‘‘வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.”[10]

என்றுஈகை பற்றி குறள் விளக்குகின்றது.

“வாய்மை இடத்த” என்ற கதையில் வேலை பார்க்கும் பெண், அலுவலகத்தில் இருக்கின்றாள். தீபாவளி பண்டிகை என்பதால் அலுவலகத்தில் வேலையானது ஓடவில்லை. நான்கு நாட்கள் விடுமுறையை நினைத்து எல்லோரும் மகிழ்ச்சியில் இருக்கின்றனர். ஆனால் அந்தப் பெண் மட்டும் காலையில் பேருந்தில் பார்த்த பெண்ணைப் பற்றி நினைத்து கொண்டிருக்கின்றாள். அவள் கூலி வேலை செய்கின்றவள். கையில் பாண்டும், மண்வெட்டியும் வைத்து இருந்தாள். அவள் பேருந்தில் ஏற முயற்சிக்கும் பொழுது எந்த நடத்துனரும் பேருந்தில் ஏற அனுமதிக்கவில்லை. அங்கும் இங்குமாக அப் பெண் அல்லாடுவதைப் பார்த்த அலுவலகத்துப் பெண் வருத்தப்பட்டாள். மீண்டும் ஒரு பேருந்தில் ஏறிய பெண் நிலை தடுமாறி கீழே சரிந்தாள். அப்போது அலுவலகத்துப் பெண் அவளை பிடித்தாள், அப்போது பாண்டு, பெண்ணிடம் கூட்டம் சற்று குறைந்த பிறகு வேலைக்கு செல்லலாமே என்றாள். அதைக் கேட்டவள் நான் நேரத்திற்கு வேலைக்குப் போகவில்லை என்றால் வேலையைப் பிரித்து கொடுத்து விடுவர். என் கணவன் முன்னாடியே சென்று விட்டான். நான் போனால் தான் எங்களுக்கு வேலை கிடைக்கும் இல்லையென்றால் இரவுக்குச் சாப்பாடு கிடையாது என்றாள். அந்த அலுவலகப் பெண் ஆட்டோவில் போகலாம் நான் உன்னை இறங்கி விடுகின்றேன் என்பதை கேட்ட கூலிப் பெண், இன்றைக்கு ஒரு நாள் நீ இறக்கி விட்டால்

நாளையில் இருந்து நான் என்ன செய்வேன் அடை மழையினால் கட்டிட வேலை பாதிக்கப்பட்டுள்ளது. நீங்க போங்க நான் எப்படியாவது போகின்றேன் என்று கூறிய அந்தப் பெண் பற்றியும் அலுவலகத்தில் இருந்து நினைப்பதால் அவளுக்கு வேலை ஓடவில்லை. தீபாவளிக்கு வீட்டிற்குத் தேவையான பொருட்களை எல்லாம் வாங்கிக் கொண்டு மாலை பேருந்தில் ஏறி உட்காந்திருந்த அவள் அருகில் காலையில் பார்த்த கூலி வேலை செய்த பெண் வந்து அமர்ந்தாள். அவளைப் பார்த்ததும் வேலை கிடைத்ததா என்று கேட்டவளிடம் இல்லை என்றாள். தீபாவளிக்கு என்ன செய்வாய் என்று கேட்ட அலுவலகப் பெண்ணிடம், கடனை வாங்கியாவது சமாளிக்க வேண்டும் என்று கூறிய பெண்,எனக்கு ஒரு உதவி செய் எனக் கையில் இருந்த தீபாவளி பொருளை எல்லாம் கொடுத்து இரண்டு வருடத்திற்கு முன்பு தீபாவளி நேரத்தில் என் குழந்தை இறந்துவிட்டது. அன்றிலிருந்து ஒரு வேண்டுதல் யார் என்று தெரியாதவர்களிடம் தீபாவளி பொருளைக் கொடுப்பதற்காக வேண்டினேன். எனக்காக வாங்கிக் கொள் என்பதை கேட்ட கூலி வேலை செய்யும் பெண் அதை மறுக்கின்றாள். என் குழந்தைக்காக, வேண்டுதல் மறுக்காமல் பெற்றுக் கொள் என்றாள். அப்பெண் அந்தப் பொருளை வாங்கி விட்டு அடுத்த தீபாவளிக்கு உன்கையில் ஒரு குழந்தை இருக்கும் என்றாள். அதற்கு அலுவலக பெண் மனதில் நகையும், புடவையும் போதாது இன்னும் வேண்டும் என்று கேட்கும் உறவுகளிடத்தில் பேருந்தில் திருட்டு போய் விட்டது என்று கூறும் ஒரு பதில் போதாதா இது வரை என் வயிற்றில் உருவாகாத என் குழந்தைதான் என்னை மன்னிக்க வேண்டும் என்று நினைத்தாள். மேலும் இந்த நிமிடமே வயிற்றில் கரு உருவானதைப் போல் உணர்ந்தாள்.

**“குந்தி மாதிரி இந்த வினாடியே வயிற்றுக்குள் கர்ப்பம் வாங்கிக் கொண்ட மாதிரி உள்ளுணர்வு”** என்று ஈகை சிறப்பினை ஆண்டாள் பிரியதர்ஷினிகூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தொகுப்புரை

வீரம் மனிதனிடத்தில் வெளிப்படும் ஒரு செயலாகும். அவற்றைப் பற்றி ஆசிரியர் கூறியுள்ளதைக் காணலாம். காதல் ஆண், பெண் இருவருக்கும் ஏற்படும் ஒன்றாகும். அவற்றில் ஏற்படும் சிக்கலினை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.பெண் கல்வியின் அவசியத்தை ஆசிரியர் விளக்கியுள்ளார். இசை கற்கும் முறையும், அதில் ஏற்படும் சிக்கல் பற்றியும் கூறியுள்ளதைக் காணலாம். நட்பில் ஏற்படும் சிக்கலினைக் கூறியுள்ளார். ஈகை பழக்கம் சிறந்த ஒன்றாகும் என்பதனையும், கற்பில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கலினையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

## அடிக்குறிப்பு


1. தி.சு.நடராஜன், பண்பாட்டு வெளிகள், ப.4
2. சுரதா கல்லாடன் (ப.ஆ), மகாகவி பாரதியார் கவிதைகள், ப.219
3. இரா.பி.சேதுப்பிள்ளை, தமிழின்பம், ப.76
4. சுபாசு சுந்திர போசு, கட்டுரை இலக்கியம், ப.70
5. பா.அருள்ஜோதி, ஜோதிர்லதா கிரிஜா குறுநாவல்களில் பெண்ணியமும் வாழ்வியல் பதிவுகளும், ப.118
6. ம.சித்ரகலா, தமிழ் இலக்கியத்தில் ஆளுமை பகுதி1, ப.95
7. கண்ணகி கலைவேந்தன்(ப.ஆ), ஔவை தமிழ் ஆய்வு மாலை, ப.1075
8. பி.பாலராஜ்(மு.ப), திருக்குறள் வாழ்வியற் நெறிமுறைகள்,ப.256
9. தே.ஹெலினா(ப.ஆ), திருக்குறள் புதிய உரை, ப.59
10. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா-1527